முருகப்பெருமான் துணை

**மகான் ஜெகநாதர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**22.02.2024,** வியாழக்கிழமை

1. தருமராஜனே ஆறுமுக அரங்கா
தவராஜனே ஞான தேசிகா
வறுமை போக்கி உலகை காக்க
வள்ளலாய் வந்த குருராசா
2. அரசனே உன் பெருமை கூறி
அறிவிப்பேன் சோபகிருது சால்திங்கள்
வரமென தச திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 10 ம் நாள், 22.02.2024, வியாழக்கிழமை)
வழங்குவேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை ஜெகநாதர் யானும்
அருளுவேன் உலகநலம் பெற
ஆசிதந்து அரங்க மகானும்
ஆக்கமுடன் ஞானிகள் சக்தியாக அருள
4. அருளவே பிரணவக்குடில் நோக்கி
அனைவரும் அணுகி வந்து
அருளமுதுதனை குடிலில் உண்டு
ஆற்றல் தரும் தீட்சை ஏற்று
5. ஏற்றுமே மக்களெல்லாம் அரங்கன்வழி
இணையிலா தவதரும சக்திதனை
ஏற்றுமே பூசைகள் தொடரவே
யாவர்க்கும் சக்திகள் பெருகி
6. பெருகியே ஞானபலம் கூடியே
பிரம்ம சூட்சும சர்வ சக்தியும்
ஆறுமுகனார் வடிவினில் அனைவரும்
அடைந்து ஞானவான்களாக
7. ஆகவே அவரவரும் செயல்பட
அருள்பொருள் வளம் கூடிட
வகையான செயல்பாடுகளும்
வரலாறு காணும்படி தேறி

8. தேறி உலக மாற்றம் தானும்
தேசிகன் ஆசிபட நடக்கும்
ஆறுமுகனார் வழிபாடு பெருகிட
அகிலமதில் முருகப்பெருமான் வெளிப்பட

9. வெளிப்பட ஞானிகள் கூட்டம்
வையகம் எங்கிலும் நிரம்பி
அழியாமை தருகின்ற ஞானசக்தியாகி
அகிலம்தனில் அற்புதம் நிகழ்த்தும்

10. நிகழ்த்தவே அரங்க மகானின்
நீதி நெறி வழிகள் தனை
வகைபட மக்களெல்லாம் ஏற்று
வணங்கி சேவைகள் ஏற்று

11. ஏற்றுமே தரும சாலைகள் அமைத்து
எங்கும் தருமம் வளர தழைக்க
ஆற்றல்பட ஞான ஆட்சி மலரும்9
அறிவித்த துல்லிய ஆசி முற்றே

—சுபம்—